# கிண்ணியா நகர சபை

# திருக்கோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 19 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 08 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி நகரசபைத் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிண்ணியா நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013ஆம் ஆண்டிற்காகப் பெறவேண்டிய முத்திரைக்கட்டணம் ரூபா.2,315,550 தொகை கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013ஆம் ஆண்டிற்காகப் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.2,491,170 கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையால் பேணப்பட்ட இறைச்சிக் கடை குத்தகை பதிவேட்டின் படி மீளாய்வாண்டிற்காகப் பெற வேண்டிய இறைச்சிக் கடை குத்தகை

ரூபா.6,658,914 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய குத்தகையாக ரூபா.7,230,533 தொகை காட்டப்பட்டதனால் பெறவேண்டிய இறைச்சிக் கடை குத்தகை ரூபா.571,618 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பேரேட்டின் படி மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ஆதனவரி வருமானம் ரூபா.2,026,105 தொகையாக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா.1,821,332 தொகையாக காட்டப்பட்டதனால் அறவிடவேண்டிய ஆதனவரி வருமானம் ரூபா.204,773 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது வாகனடயர், வாகனமின்கலம், வாகன வாடகை போன்றவாறான நடைமுறை செலவினத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா.34,000 கூட்டு மொத்த தொகையானது மூலதன செலவாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்
----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடை வாடகைப் பணமாகிய ரூபா.2,133,204 தொகையையும் மீன்சந்தைக் குத்தகைப் பணமாகிய ரூபா.4,294,987 தொகையையும் உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவையாக உள்ள கோழி இறைச்சிக் கடைகளின் குத்தகைப் பணமாகிய ரூபா.20,667 தொகையை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009ஆம் ஆண்டுக்குரிய நிலுவையாக உள்ள வாராந்த சந்தைக் குத்தகைப் பணமாகிய ரூபா.22,055 தொகையை அறவிடுவதற்கு ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணி கட்டிடம் | 31,403,838 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதி இயந்திரங்கள் | 4,638,775 | நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| மோட்டார் வாகனங்கள் | 14,216,506 | |
| தளபாடம் பொருத்துகள் | 4,214,257 | |
| அலுவலக உபகரணங்கள் | 285>619 | |
| கடன் கொடுத்தோர் | 3,452,568 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் |
| நானாவித வைப்புக்கள் | 4,582,602 | காலப்பகுப்பாய்வு |

1.3.4 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை
---------------------------------------------------------------------------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255) | |
| (ii) பிரிவு 177(2) | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கத்தை பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சபையால் 2014 A+லை 31ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) பிரிவு 180(1) | ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் சபையின் தவிசாளரால் விரிவான வருடாந்த நிர்வாக அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான அறிக்கை மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) 700 (5) | பெறுகைக் குழு தீர்மானமும், ஒப்பந்தங்களை ஏற்றுக் கொண்டமைக்கான கடிதங்களும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 702 (3) | ஒப்பந்தக்காரர்களால் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 571(1) | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பான கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 1.3.5 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் சொத்துக்கள் 01 ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் வரையான காலம் வரை பயன்படுத்தப்படாமல் உள்ளது.

| சொத்துகளின் பெயர் | பெறுமதி<br>ரூபா. | பயன்படுத்தப்படாத காலம் |
|---|---|---|
| உழவு இயந்திரம் | 716,000 | 04 வருடங்கள் |
| இரண்டு சக்கர உழவு இயந்திரம் | 34,137 | 06 வருடங்கள் |
| டிப்பர் வாகனம் | 5,098,000 | 02 வருடங்கள் |
| சீமெந்து அரைக்கும் இயந்திரம் | 300,000 | 03 வருடங்கள் |
| புகைப்பட கருவி | -- | 1 வருடங்கள் |
| டிஜிட்டல் புகைப்பட கருவி | நன்கொடை | 2 வருடங்கள் |
| பக்ஸ் இயந்திரம் | குறிப்பிடப்படவில்லை | 02 வருடங்கள் |
| Over Head Projector | | 1 வருடங்கள் |
| Conica Photo copier | குறிப்பிடப்படவில்லை | 1 வருடங்கள் |

| | | |
|---|---|---|
| Voice recorder | நன்கொடை | 2 வருடங்கள் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானத்துக்கு மேலான செலவினம் ரூபா.20,386,740 ஆகும். அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்திற்கு மேலான செலவினம் ரூபா.2,512,834 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.17,873,906 முன்னேற்றத்தினைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

நகர பிதாவினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமானவிடயம் | மதிப்பிடப்பட்டது | அறவீடு செய்யப்பட்டது | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரிகள் | 398,728 | 127,266 | 271,462 |
| குத்தகை | 9,281,500 | 5,171,333 | 4,110,167 |
| வாடகை | 2,070,000 | 82,926 | 1,987,074 |

#### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160ஆம் பிரிவுக்கு அமைய, நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா.2,026,105 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்

--------------------------------------------------------------------------------

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள 08 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக சபையின் 273 ஆம் தீர்மானத்தின்படி வருமான நிர்வாக கட்டணங்கள் அறவிடப்படாததால் சபை வருடாந்தம் ரூபா.24,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

2.2.4 நீதிமன்ற தண்டப்பணம்

---------------------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திடமிருந்து 2013 திசெம்பர் 31இல் கிடைக்கவேண்டிய தொகையினை கணிப்பீடு செய்து மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 07 வாகனங்கள் 09 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதிகளில் 24 ஊழியர்களுக்கு சபையினால் வழங்கப்பட வேண்டிய உதவுதொகையை செலுத்தப்படாததால், மீளாய்வாண்டின் போது தொழில் திணைக்களத்தினால் வழக்கு தாக்கல் செய்ததன் பிரகாரம் உதவு தொகையும், தண்டப்பணமும் உள்ளடங்கலாக ரூபா.632,644 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபைகளின் அறிக்கையின் பிரகாரம் 109 களஞ்சியப் பொருட்களும், 4739 நூலக புத்தகங்களும் குறைவாக காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபையினால் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

-----------------------------------------------------------------

2013ஆம் ஆண்டில் திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் ரூபா.3.75 மில்லியன் கிரயத்தில் அமைக்கப்பட்ட திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான நிலையத்தில் முறையாக திண்மக் கழிவுகளை தரம் பிரித்து முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கை இடம்பெறாத காரணத்தினால் பின்னர் இத்திட்டம் முற்றாகக் கைவிடப்பட்டது. இருந்த போதிலும், இத்திட்டத்தின் பக்கவிளைவுகளால் அப்பிரதேச மக்களுக்கு சுற்றுச் சூழல் பாதிப்பை இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

2013 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | மிகை | பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 02 | -- | -- | 02 |
| உதவியாளர்கள் | 27 | 24 | -- | 03 |
| சிற்றூழியர்கள் | 80 | 69 | -- | 14 |
| ஏனையவர்கள் | -- | 16 | 16 | -- |
| | 109 | 109 | 16 | 16 |

இலங்கை நிர்வாக சேவை வகுப்பு II தரம் III பதவியும் இலங்கை கணக்காளர் சேவை வகுப்பு II தரம் III பதவியும் கடந்த ஐந்து வருடகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------------------

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 27% தொடக்கம் 100% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

------------------------------------

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2015 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு தோற்றுவிக்கப்பட்டிருந்த போதிலும் அது உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) வருமான முகாமைத்துவம்

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு